முழுப் பதிப்புரிமையுடையது

**இலங்கை கணக்கீட்டு தொழினுட்பவியலாளர் கழகம்**

**மட்டம் III பரீட்சை – 2020 யூலை**

# (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும்

(Financial Controls and Audit)

2020-10-03
பிற்பகல்
[1.45 – 5.00]

பக்கங்கள் : 09
வினாக்கள் : 09

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):
  (1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
  *விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*
  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***
  (3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*
  (4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாகக் குறிப்பிடுக.*
  (5) *நிரற்படுத்தப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  (6) ***செயல் வினைச் சொற்களின் பட்டியல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் பட்டியலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

ஒரு கம்பனியின் உரிமையாளர்கள் அந்தக் கம்பனியை முகாமை செய்பவர்களிலிருந்து வேறுபடும் பட்சத்தில் எப்போதும் சிறந்த நிறுவன ஆளுகை (corporate governance) முக்கியமானது. நிறுவன ஆளுகையின் சகல வடிவங்களினதும் பொதுவான கோட்பாடுகள் பொதுவாகப் பங்குதாரர்கள், சபை அங்கத்தவர்கள் மற்றும் ஏனைய நாட்டதாரர்கள் தொடர்புபட்டதாகும்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

(a) நிறுவன ஆளுகையின் இரண்டு (02) கோட்பாடுகளை **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(b) நிறுவன ஆளுமை மீதான சிறந்த நடைமுறைக் கோவையில் கோடிட்டுக் காட்டப்பட்ட பணிப்பாளர் சபையின் வகிபாகத்தின் மூன்று (03) வழிகாட்டல்களைக் **குறிப்பிடுக.**

(03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 02

நீங்கள் மின் உபகரணங்களை இறக்குமதி செய்து விற்பனை செய்யும் **வரையறுக்கப்பட்ட அல்பா (தனி) கம்பனியின்** கணக்காளராவீர்கள். பிரதானமாக கொவிட் 19 (COVID 19) நோய்ப் பரவல் காரணமாக வியாபாரமானது கடந்த இரு காலாண்டுகளில் கணிசமானளவு நட்டத்தை அடைந்தது. பணிப்பாளர் சபையானது இடர்ப் பகுப்பாய்வு அறிக்கை ஒன்றினைத் (risk analysis report) தயாரிக்குமாறு உங்களைக் கேட்டுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

**வரையறுக்கப்பட்ட அல்பா (தனி) கம்பனி** முகங்கொடுக்கின்ற மூன்று (03) வெளிவாரி இடர்களையும் இரண்டு (02) உள்வாரி இடர்களையும் **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

## வினா 03

நிதித் தகவல்களைப் பயன்படுத்துவோருக்கு அத்தகவல்கள் நியாயமான அளவில் துல்லியமானவை எனவும் முறையாகத் தயாரிக்கப்பட்டு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன எனவும் நம்பிக்கையூட்டுவதில் உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் முக்கிய பங்கு வகிக்கிறது. முத்தரப்புத் தொடர்புமுறை (three party relationship) என்பது உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலின் ஒரு மூலகம் (element) ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலொன்றில் முத்தரப்புத் தொடர்புமுறையை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 04

தரக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் நிறுவன மட்டத்திலும் தனிநபர் கணக்காய்வு மட்டத்திலும் தாபிக்கப்படல் வேண்டும். ஈடுபடுத்தல் அணியின் அங்கத்தவர்களால் மேற்கொள்ளப்படும் வேலைகளை மீளாய்வு செய்வது ஒவ்வொரு தனித்தனி ஈடுபடுத்தலுக்கும் அத்தியாவசியமானதாகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) தரக் கட்டுப்பாடுகள் முறைமையொன்றின் மூன்று (03) மூலங்களைக் (elements) **குறிப்பிடுக.**
(03 புள்ளிகள்)

(b) ஈடுபடுத்தல் அணியின் அங்கத்தவர்களால் மேற்கொள்ளப்படும் வேலைகளின் மீளாய்வின்கீழ், தனியான ஈடுபடுத்தல் ஒன்றில் உட்படுத்தப்பட வேண்டிய இரண்டு (02) செயற்பாடுகளை **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

கீழே தரப்பட்டுள்ள வரைவுக் கணக்காய்வு அறிக்கையானது, 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட கிறீன் ஷிப்பிங் (தனி.) கம்பனியின்** சிரேட்ட கணக்காய்வு அலுவலரால் தயாரிக்கப்பட்டதாகும்:

**அபிப்பிராயம்:**

நாம் **வரையறுக்கப்பட்ட கிரீன் ஷிப்பிங் (தனி.) கம்பனியின்** 2020 மார்ச் 31 இலான நிதிநிலைக் கூற்று, அந்தத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று, உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் காசுப் பாய்வுக் கூற்று ஆகியவற்றையும் கணிசமான கணக்கீட்டுக் கொள்கைகளின் தொகுப்பு மற்றும் பிற விபரத் தகவல்களையும் கொண்டுள்ள, இத்துடன் இணைந்த நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வினை நிறைவு செய்துள்ளோம்.

எமது அபிப்பிராயத்தின்படி, இந்த நிதிக் கூற்றுக்கள் சிறிய மற்றும் நடுத்தர அளவு உரிமங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக (SME க்களுக்கான SLFRS) 2020 மார்ச் 31 இலான கம்பனியின் நிதிநிலைக் கூற்று மற்றும் அந்தத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசுப் பாய்வுகள் பற்றிய உண்மையானதும் நேர்மையானதுமான தோற்றப்பாட்டினைத் தருகின்றன.

**நிதிக் கூற்றுக்களுக்கான முகாமை மற்றும் ஆளுகை பாரப்படுத்தப்பட்டோரின் பொறுப்புகள்:**

சிறிய மற்றும் நடுத்தர அளவு உரிமங்களுக்கான இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக (SME க்களுக்கான SLFRS) உண்மையானதும் நேர்மையானதுமான தோற்றப்பாட்டினைத் தருகின்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும், மோசடி அல்லது வழுக்கள் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்று அற்ற வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானவை என முகாமை கருதும் அகக் கட்டுப்பாடுகளுக்கும் முகாமை பொறுப்பாகும்.

முகாமையானது கம்பனியைக் கலைக்க அல்லது அதன் தொழிற்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவர எண்ணினால் அல்லது அவ்வாறு செய்வதைத் தவிர மாற்றுவழி இல்லாதவிடத்து, நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தலில் தொடர்ந்தியங்கும் தாபனமாக தொடருவதற்கான கம்பனியின் இயலுமை, பொருத்தமானவிடத்து தொடர்ந்தியங்கும் தாபனம் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் தொடர்ந்தியங்கும் தாபன அடிப்படையினைப் பயன்படுத்துவதை வெளிக்காட்டுவதற்கு முகாமை பொறுப்பானதாகும்.

ஆளுகை பாரப்படுத்தப்பட்டோர், கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்வதற்குப் பொறுப்பாளர்களாவர்.

**ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் மீதான அறிக்கை:**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 163 (2) இல் தேவைப்படுத்தப்பட்டதன்படி, கணக்காய்வுக்குத் தேவையான சகல தகவல்கள் மற்றும் விளக்கங்களை நாம் பெற்றுக் கொண்டுள்ளதுடன், எமது பரீட்சிப்பிலிருந்து கம்பனி முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணுவது தெரியவந்துள்ளது.

கொழும்பு.

***நீங்கள் செய்யவேண்டியவை:***

(a) மேற்படி கணக்காய்வு அறிக்கையில் **உட்படுத்தப்படாத** ஐந்து (05) மூலகங்களை (elements) **இனங்காண்க.** (05 புள்ளிகள்)

(b) கணக்காய்வாளரின் அபிப்பிராயத்தினைத் தயாரிப்பதில் கணக்காய்வாளரால் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய மூன்று (03) விடயங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) மாற்றப்பட்ட (modified) அபிப்பிராயத்தின் இரண்டு (02) வகைகளை **நிரற்படுத்துக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**ருக்மன் அசோசியேற்ஸ் (RA)** இரண்டு (02) சிரேட்ட கணக்காய்வு அலுவலர்களையும் ஐந்து (05) கனிஷ்ட அலுவலர்களையும் கொண்டுள்ள ஒரு தனிக் கணக்காய்வுச் சேவை வழங்குநராகும். 2010 ஆம் ஆண்டிலிருந்து **வரையறுக்கப்பட்ட HTP பிரைட் சேர்விசஸ் (தனி) கம்பனியின்** கணக்காய்வாளராக **RA** தொழிற்படுகிறது. 2010 ஆம் ஆண்டிலிருந்து **HTP** யின் கணக்காய்வுக்கான ஈடுபடல் பங்காளராக **திரு. ருக்மன்** இருப்பதுடன் கடந்த மூன்று ஆண்டுகளாக இந்தக் கணக்காய்வுக்குப் பொறுப்பான சிரேட்ட அலுவலராக **சமன்** இருக்கிறார். **HTP** இன் பணிப்பாளர்கள் கம்பனியின் உரிமையாண்மைச் சாதனங்களின் மதிப்பீட்டினை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுள்ளனர். **RA** அதன் மொத்த வருமானத்தில் கிட்டத்தட்ட 35% இனை **HTP** க்கு கணக்கீட்டு மற்றும் வருடாந்தக் கணக்காய்வுச் சேவைகளை வழங்குவதன் மூலம் பெறுகின்றது. அதன் காரணமாக **திரு. ருக்மன்** வாடிக்கையாளரின் கோரிக்கையை மறுப்பது கடினமானதாக உள்ளது.

***நீங்கள் செய்யவேண்டியவை:***

(a) மதிப்பீட்டுப் பணியினை ஏற்றுக்கொள்வதில் **ருக்மன் அசோசியேற்ஸ்** நடைமுறைப்படுத்த வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) மேற்படி விவரணம் தொடர்பில் **RA** இற்குப் பொருத்தமான அடிப்படை நெறிமுறைக் கோட்பாடுகளுடன் ஒத்திசைவதற்கான அச்சுறுத்தல்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

(A) ஒவ்வொரு கணக்காய்வு ஈடுபடுத்தலுக்கும் திட்டமிடல் ஞாபகக்குறிப்பு (Planning Memorandum) தயாரிக்கப்படுதல் வேண்டும். அந்த ஞாபகக்குறிப்பின் நோக்கங்கள் திட்டமிடல் செயன்முறையின் முறைசார் பதிவுகளை வழங்குவதுடன், ஈடுபடல் ஊழியர்களின் சகல மட்டங்களுக்கும் திட்டமிடல் தீர்மானங்களைத் தெரிவிப்பதாக இருக்கும்.

***நீங்கள் செய்யவேண்டியது:***

திட்டமிடல் ஞாபகக்குறிப்பில் உட்படுத்தப்பட வேண்டிய நான்கு (04) விடயங்களை **ஏற்பிசைவுசெய்க.**

(04 புள்ளிகள்)

(B) கணக்காய்வு ஆவணப்படுத்தலானது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு நடைமுறைகள், பெறப்பட்ட தொடர்புடைய கணக்காய்வுச் சான்றுகள் மற்றும் கணக்காய்வாளர் மேற்கொண்ட முடிவுகள் ஆகியவற்றின் பதிவு ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) வேலைத்தாள்களின் வடிவமைப்பு (form) மற்றும் உள்ளடக்கம் (content) பாதிக்கப்படக்கூடிய மூன்று (03) விடயங்களை **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(b) நிரந்தரக் கணக்காய்வுக் கோப்பில் உள்ளடக்கப்படக்கூடிய மூன்று (03) வகையான தகவல் களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 08

(A) **ஸ்ருடன்ட் ஹெல்ப் நிதியமானது (SHF)** பொருளாதார ரீதியில் சவால்களுக்கு முகஞ்கொடுக்கும் பிள்ளைகளுக்கு கற்றல் உதவிகளை வழங்கும் அரச சார்பற்ற அமைப்பு (NGO) ஆகும். **SHF** ஆனது சம்பளப் பட்டியல் செயன்முறைக்காக SAP இன் உப தொகுதியொன்றைப் (module) பேணுகிறது.

2020 மார்ச் 31 இல் முடிவடைந்த நிதியாண்டிற்கான சட்டநியதிக் கணக்காய்வின்போது, கணக்காய்வுச் சிரேட்ட அலுவலரினால் சம்பளப்பட்டியல் செயன்முறை தொடர்பில் கீழ்வரும் தகவல்கள் இனங்காணப்பட்டன:

- நிறுவனமானது ஒரு பணிப்பாளர், நிதி மற்றும் நிருவாக முகாமையாளர், மனித வள (HR) முகாமையாளர், மனித வள நிறைவேற்று அலுவலர், கணக்குகள் நிறைவேற்று அலுவலர், கணக்கு எழுதுவினைஞர் மற்றும் ஐந்து (05) ஊழியர்களைக் கொண்டுள்ளது.

- ஊழியர்களுக்கு வேலை செய்த நாட்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் சம்பளம் செலுத்தப்படுகிறது. வருகைப் பதிவுகளுக்காக (attendance records) பாதுகாப்பு அலுவலகத்தில் கைமுறையான (manual) வருகைப் பதிவேடு பேணப்படுகிறது.

- மாதாந்தச் சம்பளப் பட்டியலானது பாதுகாப்பு அலுவலகத்திலிருந்து பெறப்படும் வருகைப் பதிவுகளின் அடிப்படையில் கணக்குகள் நிறைவேற்று அலுவலரினால் கணிக்கப்படுகிறது.

- சம்பளப்பட்டியல் தொகுதியானது கணக்கு எழுதுவினைஞரினால் இற்றைப்படுத்தப்பட்டு (update) மனித வள நிறைவேற்று அலுவலரினால் அங்கீகரிக்கப்படுகிறது. **SHF** இனால் சம்பளப்பட்டியல் கணக்கிணக்கம் தயாரிக்கப்படுவதில்லை.

- மாதாந்தக் கொடுப்பனவுகள் உரிய ஊழியர்களின் வங்கிக் கணக்குகளுக்கு நிதி மற்றும் நிருவாக முகாமையாளரின் அங்கீகாரத்துடன் வங்கி மாற்றல் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

- SAP க்கான அனுமதிப்பத்திரக் கிரயம் காரணமாக, நிதிப் பிரிவினாலும் மனித வளப் பிரிவினாலும் ஒரு தனிப் பயனர் உட்புகுதல் (single user login) பயன்படுத்தப்படுகின்றது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) **SHF** இன் மேற்படி சம்பளப் பட்டியல் செயன்முறையில் உள்ள மூன்று (03) அகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்களை (internal control weaknesses) **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(b) மேற்படி பலவீனங்களைச் சமாளிப்பதற்கு ஒவ்வொரு பரிந்துரை வீதம் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) பயனுறுதிவாய்ந்த சம்பளப் பட்டியல் செயன்முறையின் இரண்டு (02) நோக்கங்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(d) தகவல் முறைமைகள் தொடர்பில் **SHF** நடைமுறைப்படுத்த வேண்டிய IT பொதுக் கட்டுப்பாடு களுக்கு மூன்று (03) உதாரணங்களையும் IT பிரயோகக் கட்டுப்பாடுகளுக்கு இரண்டு (02) உதாரணங்களையும் **நிரற்படுத்துக.** (05 புள்ளிகள்)

(B) அகக் கட்டுப்பாட்டு முறைமை (internal control system) என்பது நிறுவனம் அதன் நோக்கங்களையும் இலக்குகளையும் நிறைவு செய்வதில் உதவுவதற்காக முகாமையினால் அறிமுகப்படுத்தப்பட்ட செயன்முறைகளைக் குறிக்கின்றது. COSO அகக் கட்டுப்பாட்டு முறைமைச் சட்டகமானது கட்டுப்பாட்டுச் சூழல், இடர் மதிப்பீடு, கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள், தகவலும் தொடர்பாடலும் மற்றும் கண்காணிப்பு ஆகிய ஐந்து கூறுகளைக் கொண்டுள்ளது. எனினும், அகக் கட்டுப்பாடுகளில் நம்பிக்கை கொள்வது தொடர்பில் இயல்பாக இணைந்துள்ள வரையறைகள் (inherent limitations) இருப்பதனால், கணக்காய்வாளர் அகக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்து வதன் மூலம் மோசடிகள் மற்றும் வழுக்களுக்கான இடர்களை ஒருபோதும் நீக்க முடியாது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) அகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றின் இரண்டு (02) நோக்கங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) நான்கு (04) கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(c) அகக் கட்டுப்பாடுகளின் இயல்பாக இணைந்துள்ள வரையறைகள் நான்கினை (04) **இனங்காண்க.** (04 புள்ளிகள்)

(Total 25 புள்ளிகள்)

## வினா 09

(A) நீங்கள் உள்நாட்டுச் சந்தைக்கு பீங்கான் கோப்பைகளைத் தயாரித்து, விற்பனை செய்யும் கம்பனியான **வரையறுக்கப்பட்ட BC (தனி) கம்பனியின்** சட்டநியதிக் கணக்காய்வுக்குப் பொறுப்பான சிரேட்ட கணக்காய்வு அலுவலராவீர். கணக்காய்வில் ஈடுபடல் தொடர்பான கீழ்வரும் விபரங்கள் 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த நிதியாண்டிற்கான கணக்காய்வுத் திட்டமிடல் ஞாபகக்குறிப்பு மற்றும் தொடர்புபட்ட வேலைத்தாள்களில் இருந்து பிரித்தறியப்பட்டவை ஆகும்:

ஆண்டிற்கான கம்பனியின் விற்பனை வருமானம் ரூபா 450 மில்லியனானது நான்கு வாடிக்கையாளர் களிடமிருந்து பெறப்பட்டது. அந்த வாடிக்கையாளர்களின் கடன் காலங்கள் மற்றும் 2020 மார்ச் மாதத்திற்கான விற்பனை அடங்கலாக வாடிக்கையாளர் விபரங்கள் கீழ்வருமாறு:

| வாடிக்கையாளர் | ஆண்டிற்கான விற்பனை (ரூபா மில்லியனில்) | கடன் காலம் | 2020 மார்ச் மாதத்திற்கான விற்பனை (ரூபா மில்லியனில்) |
|---|---|---|---|
| ஏரோ சுப்பர் | 180 | 60 நாட்கள் | 40 |
| சுப்பர் புட் சிற்றி | 120 | 45 நாட்கள் | 10 |
| அசோசியேற் கம்பனி | 100 | 120 நாட்கள் | 60 |
| முகாமைப் பணிப்பாளரின் மனைவி | 50 | 240 நாட்கள் | 40 |

பொருண்மை அடிப்படையில் வியாபார வருமதிகளுக்கான உறுதிசெய்தல் கடிதங்களை அனுப்புவதற்கு கணக்காய்வு அணி **ஏரோ சுப்பர்** மற்றும் **சுப்பர் புட் சிற்றி**யினைத் தெரிவு செய்துள்ளது.

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் கணக்காய்வு அணியினரால் ஏற்பிசைவுசெய்யப்பட்டன:

- விற்பனை நிறைவேற்று அலுவலர் வாடிக்கையாளர்களிடமிருந்து கட்டளைகளைப் பெற்று மின்னஞ்சல் மூலம் கணக்கு நிறைவேற்று அலுவலருக்கு அது பற்றித் தெரிவிப்பார். பின்னர் கணக்கு நிறைவேற்று அலுவலரினால் விற்பனைப் பட்டியல் (invoice) தயாரிக்கப்பட்டு, அப்போதே வருமானம் ஏற்பிசைவு செய்யப்படுகிறது.

- 2020 மார்ச் 31 இல் வியாபார வருமதிகள் மீதி ரூபா 180 மில்லியன். இதில் ரூபா 50 மில்லியன் முகாமைப் பணிப்பாளரின் மனைவியிடமிருந்தும் ரூபா 80 மில்லியன் அசோசியேற் கம்பனியிடமிருந்தும் ரூபா 50 மில்லியன் ஏரோ சுப்பரிடமிருந்தும் வருமதியாக உள்ளது.

- கம்பனியின் ஏற்பாட்டின்படி, கம்பனியின் தொழிற்சாலையிலிருந்து வாடிக்கையாளர்கள் பொருட்களைச் சேகரிப்பதுடன், அவர்கள் பொருட்களைப் பெற்றுக்கொண்டமை பற்றி வழங்குகின்ற விலைப் பட்டியலின் பிரதியானது கோப்பிடப்படுவதற்காக நிதிப் பிரிவுக்கு அனுப்பப்படும்.

- ஆண்டிற்கான விற்பனையின் அடிப்படையில் விற்பனை அணியினருக்கும் முகாமைப் பணிப்பாளருக்கும் ஊக்குவிப்புத் தொகைகள் செலுத்தப்படுகிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) **வரையறுக்கப்பட்ட BC (தனி) கம்பனியின்** கணக்காய்வு நடைமுறைகளை மேற்கொள்ளும்போது விசேட கவனம் தேவைப்படும் நான்கு (04) பகுதிகளை **இனங்காண்க.** (04 புள்ளிகள்)

(b) வாடிக்கையாளர் வருமதிக் கணக்கு மீதிகள் தவிர, கணக்காய்வாளர் வெளிவாரி உறுதி செய்தலைப் பயன்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்களுக்கு மூன்று (03) உதாரணங்களை **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(c) கட்டுப்பாட்டுச் சோதனைகள் மற்றும் வலுவளிப்பு நடைமுறைகள் (substantive procedures) ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாட்டினை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(d) உறவுமுறைத் தரப்பினர் ஊடுசெயல்களை (related party transactions) இனங்கண்டு வெளிக்காட்டுவதற்குப் பொறுப்பான தரப்பினரை **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(e) உறவுமுறைத் தரப்பினர் ஊடுசெயல்கள் தொடர்பில் **வரையறுக்கப்பட்ட BC (தனி) கம்பனியின்** கணக்காய்வுச் சிரேட்ட அலுவலர் கவனத்திற் கொள்ளவேண்டிய இரண்டு (02) இடர்களை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(B) **RMG அசோசியேற்ஸ்,** (கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் நிரற்படுத்திய) **ஹோப் PLC** இன் 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த நிதியாண்டிற்கான வருடாந்தக் கணக்காய்வினை மேற்கொண்டுள்ளது. கணக்காய்வுப் பூர்த்தி ஞாபகக்குறிப்பிலிருந்து கீழ்வரும் தகவல்கள் பிரித்தறியப்பட்டன. கீழ்வரும் அக்கறைகள் பற்றி கணக்காய்வாளரால் CFO உடன் கலந்தாராயப் பட்டதுடன் நிதிக் கூற்றுக்களைச் செம்மையாக்கம் செய்வதற்கு அவர் விரும்பவில்லை. நிதிக் கூற்றுக்கள் வழங்கப்படுவதற்காக அடுத்த வாரம் அங்கீகரிக்கப்பட வேண்டியுள்ளது. திட்டமிடற் கட்டத்தில் பயன்படுத்தப்பட்ட பொருண்மையானது வரிக்கு முன்னரான இலாபத்தின் அடிப்படையில் ரூபா 10 மில்லியன் ஆக இருந்தது.

**கணக்காய்வு அக்கறைகளும் பிறழ்கூற்றுக்களும்:**

(1) கட்டடங்கள் மீதான தேய்மானம் ரூபா 200,000/- இனால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(2) 2020 மார்ச் மாதத்திற்கான மின்சார மற்றும் நீர்க் கட்டணம் ரூபா 1 மில்லியன் அறிக்கையிடற் திகதியில் கணக்கேடுகளில் அட்டுறு செய்யப்படவில்லை.

(3) கம்பனியின் புதிய தொழிற்சாலை நிருமாணத்தின் பின்னர், செலவிடப்பட்ட (incurred) கடன்படுகைக் கிரயம் ரூபா 25 மில்லியன் ஆனது கட்டட நிருமாணக் கிரயத்தின் ஒரு பகுதியாக மூலதனப் படுத்தப்பட்டுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) பொருண்மை மதிப்பீடு ஏன் கணக்காய்வாளருக்கு முக்கியமானது என்பதற்கு மூன்று (03) காரணங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) மேற்படி பிறழ்கூற்றுக்கள் கணக்காய்வில் கொண்டுள்ள தனியான (individual) தாக்கம் மற்றும் ஒட்டுமொத்தத் (overall) தாக்கத்தினை **ஆராய்க.** (07 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |